# இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிழக்குப் பல்கழைக்கழகம், இலங்கையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்கள் சுற்று நிரூபத்தின் 65% ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களிற்கிடையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கிழக்கு பல்கலைக்கழகம் இலங்கையின், நிதிக் கூற்றுக்கள் 2012 மே 16 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) பட்டதாரி மாணவர் கல்வியின் தொடர்பு மற்றும் தரத்தை முன்னேற்றும் செயற்திட்டம் (ஐஆர்கியூயூஈ) பூர்த்தி செய்யப்பட்டு, சொத்துக்கள் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டு விட்ட போதிலும் சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து 2006 ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 9,555,427 பெறுமதியான ஆய்வு கூட உபகரணங்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 10,692,587 மற்றும் ரூபா 4,985,165 பெறுமதிகள் முறையே நேரடிச் செலவுகள் மற்றும் நேரடி வரவுகள் தொடர்பாக புலனாய்வு செய்து கணக்குகளில் பொருத்தமான சீராக்கங்களைச் செய்வதற்குப் பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) **நிதிப் பிரமாணங்கள்** | |
| (i) நி.பி 102 | 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 17,860,815 தொகையான நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 371 | கணக்குகளில் இருக்கின்ற ரூபா 66,480,590 கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு 1 தொடக்கம் 15 ஆண்டுகள் வீச்செல்லையான காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி 569 | ஒரு வைப்புப் பேரேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி 702 (3) | ஒப்பந்த உடன்படிக்கைககளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (v) நி.பி 756 | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான பல்கலைக்கழகத்தின் சொத்துக்களில் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (vi) | நி.பி 1646 | பல்கலைக்கழகத்துடன் இணக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவனைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நி.பி 1647 (பீ) | மீளாய்வாண்டிற்கான வாகனங்கள் மீதான கணிப்புச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை**

| | | |
|---|---|---|
| (i) | அத்தியாயம் X இன் பிரிவு 20.6 | சம்பளமற்ற சகல விடுமுறைகளும் படிவம் பொது 96 இல் மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை |
| (ii) | அத்தியாயம் XXVII இன் பிரிவு – 3.1 | பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியின் தமது வருகை மற்றும் வெளிச் செல்லல் நேரத்தைப் பதிவதற்கான ஒரு வருகைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவினத்திற்கான ரூபா 437,448,075 ஆன அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுத்த பின்னரான ரூபா 464,498,837 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 393,635,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்தபின்னருள்ள அந்த ஆண்டிற்கான ரூபா 411,635,687 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டு செலவினம் ரூபா 56,922,395 ஆல் அதிகரித்ததன் காரணமாக நிதிசார் விளைவுகளில் ரூபா 52,863,150 ஆல் மேலும் ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. செயலாற்றல்

#### (அ) நடைபெற்ற பரீட்சைகளின் பெறுபேறுகள்

தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டில் நடைபெற்ற பரீட்சைகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பீடம் | பரீட்சை நடைபெற்ற காலப்பகுதி | பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| விவசாயம் | 2011 மார்ச், ஏப்ரல் ஒக்தோபர், நொவம்பர் மற்றும் திசெம்பர் | 136 | 81 |
| கலை | 2011 மார்ச், ஏப்ரல், யூன், யூலை, ஒக்தோபர் மற்றும் நொவம்பர் | 293 | 282 |
| வர்த்தகமும் முகாமைத்துவமும் | 2011 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, யூன், யூலை, செப்தெம்பர், நொவம்பர் மற்றும் திசெம்பர் | 724 | 519 |
| விஞ்ஞானம் | 2011 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், ஒக்தோபர், நொவம்பர் மற்றும் திசெம்பர் | 59 | 47 |
| | மொத்தம் | 1212 | 929 |

#### (ஆ) ஒரு மாணவருக்கான கிரயம்

பல்கலைக்கழகத்தின் 7 பாடநெறிகளிற்காகவும் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2786 ஆகும். மீளாய்வாண்டில் செய்யப்பட்ட மொத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 364,049,548

தொகையாகும். ஆண்டிற்கான ஒரு மாணவரின் சராசரி மீண்டுவரும் கிரயம் ரூபா 130,671 ஆகும்.

| **மாணவர்களின் எண்ணிக்கை** | **மொத்த செலவினம்** | **ஒரு மாணவரிக்கான கிரயம்** |
|---|---|---|
| 2786 | 364,049,548 | 130,671 |

**(இ) மகாபொல மற்றும் உதவிப்பணம்**

மீளாய்வாண்டில் மஹாபொலவாக 597 மாணவர்களிற்கு ரூபா 11,981,100 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 1326 மாணவர்களிற்கு ரூபா 17,399,400 ஆன தொகை உதவிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) நூலக நிருவாகம்**

நூலகத்திலிருந்து புத்தகங்களை எடுத்திருந்த மாணவர்கள், கல்விசார் பதவியினர் மற்றும் கல்விசாரா பதவியினரால் குறித்த காலத்திற்கிடையில் 515 புத்தகங்கள் திருப்பிகொடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்தப் புத்தகங்களை மீளப் பெறும் நோக்கில் முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்காததுடன் தேசமடைந்த புத்தகங்கள் தொடர்பாகவும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 1998 ஓகத்து 18 ஆம் திகதிய 737 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்தின் பிரகாரம் உடன்படிக்கைகள் மற்றும் முறிகளை மீறியதிலிருந்தான சகல பெறுகைகளும் பல்கலைக்கழகத்திற்கு கணக்கிட வேண்டியதுடன் நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்றவாறான வட்டி உழைக்கும் சொத்துக்களில் முதலீடு செய்ய வேண்டியதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்குப் பதிலாக முறிகள் மற்றும் கடப்பாடுகளை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து கிடைத்த ரூபா 70.98 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களில் ஏனைய ஒதுக்கங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் பட்டதாரி மாணவர் கல்வியின் தொடர்பு மற்றும் தரத்தை முன்னேற்றும் செயற்திட்டத்தின் (ஐஆர்கியூயூஈ) கீழ் 155 கணணிகள் மற்றும் 06 யூபீஎஸ் களை கொள்வனவு செய்வதற்காக 2010 ஓகத்து 03 இல் ரூபா 14,559,150 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒரு சர்வதேச மென்பொருள் கம்பனியிடமிருந்து நன்கொடையாகக் அனுமதிப்பத்திர திறவு கோல்களில் போதிய இருப்பு கிடைத்திருந்த போதிலும் கூட ரூபா 5,186,455 இல் மதிப்பீடு செய்யப்பட்ட 155 அனுமதிப்பத்திர திறவு கோல்களில் (வின்டோஸ் வில்பற்றா பிஸ்தெஸ் டவுன் கிறேடட்ரூ எக்ஸ்பீ திற தொழில் ஓஈஎம் உத்தரவுப் பத்திரம்) உள்ளடங்கலாக 155 கணணிகளின் கொள்வனவிற்காக கட்டளை அனுப்பப்பட்டதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எனினும், அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திர திறவு கோள்கள் ரூபா 1,395,000 பெறுமதியான 15 ஆளுக்குரிய கணனிகள் மற்றும் 15 யூபீஎஸ்களின் பரிமாற்றத்திற்காக வழங்குனருக்கு திருப்பி அனுப்பப்பட்டது. இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக உத்தரவுப் பத்திர திறவுகோல்களின் மிகையான கொள்வனவு காரணமாக பல்கலைக்கழகத்திற்கு ரூபா 3,791,455 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) நேர காலத்துடன் பணிக்கொடை கொடுப்பனவு செய்யாதமையால் தொழில் நீதி மன்றத்தின் தீர்ப்பின் படி ரூபா 58,490 தொயையான தண்டப்பணம் செலுத்தப்பட்டது.

(ஈ) ஐக்கியராச்சியத்தில் றீடிங் பல்பலைக்கழகத்தில் பீஎச்டி பட்டப்படிப்பை தொடர்வதற்கு ஒரு சிரேஷ்ட விரிவுரையாளருக்கு 2007 மே 08 இலிருந்து கற்கை விடுமுறையை பல்கலைக்கழகம் வழங்கியிருந்தது. எனினும், கற்கை விடுமுறை 2010 யூன் 08 இலிருந்து 2010 செப்தெம்பர் 07 வரை சம்பளத்துடனும் 2010 செப்தெம்பர் 08 இலிருந்து 2010 திசெம்பர் 07 வரை சம்பளமற்றதாகவும் நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த சிரேஷ்ட விரிவுரையாளருக்கு சம்பளமற்ற விடுமுறையை சம்பளத்துடனான விடுமுறையாகக் கணிப்பிட்டதன் காரணமாக ரூபா 316,401 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3. செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகமானது ஒவ்வொரு ஆராய்ச்சி மானிய செயற்திட்டம் தொடர்பாகவும் முறையான தனித்தனி பதிவேடுகளைப் பேணியிருக்கவில்லை. பேணப்பட்ட பதிவேடுகள் செயற்திட்டங்கள், ஆராய்ச்சிக் குழுவின் அனுமதி

மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகள் என்பவை தொடர்பான விபரங்களைக் கொண்டிருக்கவில்லை. மேலே காட்டப்பட்டவை இன்மையால் அந்த ஆராய்ச்சி மானியங்களின் பயன்பாட்டிலிருந்து குறித்த நோக்கங்கள் அடையப்பட்டனவா என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) கலை மற்றும் கலாசார பீடத்தின் 9 ஆவது வருடாந்த ஆராய்ச்சிக் கூட்டத்தை நடத்துவதற்காக ஒரு ஒருங்கிணைப்பாளருக்கு ரூபா 900,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையிடமிருந்தான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்த முற்பணம் ஒருங்கிணைப்பாளரின் பெயரில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

**(இ) மருத்துவ உபகரணங்களின் கொள்வனவு**

சுகாதார நலனோம்பு விஞ்ஞான பீடத்தின் (எவ்எச்சீஎஸ்) பாவனைக்காக சென்னையிலுள்ள ஒரு வழங்குனரிடமிருந்து மீளாய்வாண்டில் ரூபா 13 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 05 விலைகோரல்களிற்குப் பதிலாக 03 விலைகோரல்கள் பெறப்பட்டிருந்தன. 03 கேள்விகளில் 02 கேள்விகள் மோசடியானதுடன் ஒரு கேள்விதாரர் ஆடைத்தொழில் உபபாகங்கள் வழங்குனரென்று காணப்பட்டது.

(ii) கேள்வி ஆவணங்கள் ஒரே தபால் அலுவலகத்திலிருந்து தபாலிடப்பட்டதுடன் சென்னையிலிருந்தான கடிதங்களில் இடப்பட்ட திகதி முத்திரை ஒரே திகதியாக இருந்தது.

(iii) கேள்விகள் எவ்எச்சீஎஸ் இன் மனித உயிரியல் திணைக்களத்தின் தலைவரால் கோரப்பட்டிருந்ததுடன் கேள்விகள் அவரின் சொந்தப் பெயருக்கு முகவரியிடப்பட்டிருந்தன.

(iv) கேள்வி ஆவணங்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தாவது இந்திய வழங்குனரிடமிருந்து மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு திணைக்களக் கொள்வனவுக் குழு சிபார்சு செய்திருந்தது. மேலும் பல்கலைக்கழகத்தின் சபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(v) இது தொடர்பாக ஒரு தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) ரூபா 4 மில்லியனாக மேற்படி உபகரணங்களுடன் கொள்வனவு செய்யப்பட்ட அல்ராசவுன்ஸ்கானர்ரை தொழில்நுட்ப பழுது காரணமாக பயன்படுத்த முடியவில்லை.

(vii) இந்த உபகரணங்களின் விலைகள், மருத்துவ உபகரணங்களிற்கான சர்வதேச சந்தையில் நிலவும் கிரயங்களிலும் பார்க்க உயர்வானதாக இருந்தது. அந்த விலைகளில் சில கீழே தரப்படுகின்றன.

| விடயத்தின் பெயர் | சந்தை விலை(ஐ.அ.டொலர்) | கொள்வனவு செய்த விலை (ஐ.அ.டொலர்) |
|---|---|---|
| பிரேத அறைக் குளிரூட்டி (பிரேதக் கிடங்கு) | 1320 – 7900 (வீச்சில்) | 26,000 |
| அல்ராசவுண்டஸ்கானர் | 8000 – 15000 | 36,324 |
| பைனாகுலா தொலைநோக்கி | 2123 - 4425 | 9,015 |

(viii) ஒரு சரக்கு அகற்றும் கம்பனிக்கு எந்த வித உடன்படிக்கையோ அல்லது அங்கீகாமேஇன்றி ரூபா 669,000 ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களித்தன்மை மற்றும் நல்ல ஆளுகை

### 4.1 கூட்டுத்திட்டம் மற்றும் நடவடிக்கைத் திட்டம்

2003 – 2007, 2007 – 2011 மற்றும் 2010 – 2015 ஆகிய காலப்பகுதிகளிற்கான கூட்டுத்திட்டங்கள் தயாரிக்கப்பட்ட போதிலும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் பிரகாரமான தொடர்புபட்ட தகவல்கள்

கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் திட்டம் வருடாந்தம் நாளது வரையாக்கப்படவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்ட செலவினத்திற்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

### 4.3 கணக்காய்வுக் குழு

மீளாய்வாண்டில் 07 கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. குழு பல கூட்டங்களில் கணக்காய்வு ஐய வினாக்களிற்குப் பதிலளிக்கும்படி சிபார்சு செய்திருந்தது. எனினும், கணககாய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட 07 கணக்காய்வு ஐய வினாக்களிற்குப் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் பொழுது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) பதிவேட்டுப் பொருட்கள்
(ஈ) முற்பணங்களின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்
(உ) கொள்வனவுகள்